


பதிவுகள்

அம்பிகையும் ஈசுவரனும் மகிழ்ச்சியடைந்தால் சர்வலோகங்களும் மகிழ்ச்சி அடையும். அம்மையப்பனை ஆனந்திக்கச் செய்யும் ஆரத அன்பின் ஊற்றுதான் ஆனைமுகக் கடவுள்.

ஒருநாள் அன்னை தந்தை முன் முகத்தைத் தொங்கப் போட்டு வந்தார், விக்னேசன்.

"முருகன் தொல்லை தாங்க முடியவில்லை; என் காதைச் சும்மா கிள்ளுறான்" என்றார்.

"ஏன்டா, அண்ணனைக் கிள்ளினாய்?" என்று கந்தனைக் கடிந்தார் ஈசுவரன்.

"அண்ணாமட்டும் என் கன்னத்தை எண்ணலாமோ?" என்று திருப்பிக் குற்றம் சாட்டினார் ஆறுமுகன்.

"கணபதி, நீ செய்த குறும்பை மறைத்துத் தம்பியை மட்டும் குற்றம் சொன்னாயே, நியாயமா?" என்று வினவினார் ஈசன்.

"நான் ஒன்றும் முதலில் அவன் கன்னத்தை எண்ணவில்லை. அவன் என் துதிக்கையின் நீளத்தை அளந்து முழம் போட்டான். பின்தான்...."

ஈசுவரன் சிரித்துவிட்டார். மகிழ்ச்சியில் திளைத்த தேவியைப் பார்த்து, "பார், உன் அருமைக் குழந்தைகளை" என்றார்.

தேவி விக்நேச்வரனை வாரி அணைத்துக் கொண்டாள். அவள்தான் உலகில் புது மணம் செய்துகொண்டுள்ள தம்பதியருக் கெல்லாம் இன்பமான இல்லறத்தை வழங்க வேண்டும் என்று பாடி இருக்கிறார் சிவப்பிர காச சுவாமிகள்.

அரவணிந்திடவே ஐங்கரன் வந்துதான்
ஐயன் செவிதனை மீட்டவும்
அறுமுகன் கிள்ளினன் என்றே நெருங்கிடவும்
அத்தனவே லயனை நோக்கி
விரைவுடன் வினவவே அண்ணன்தான் சென்னியில்
விளங்குகண் எண்ணினன்என
செம்பிறைப் பிள்ளையைப் பார்த்துநீ அப்படி
விகடமேன் செய்தாய்என
மருவுமான் கைத்தின முழுமனத் தாளன்ன
மயிலவன் நகைத்து நிற்க
மன்னரையன் உதவலரும் உமையவளை நோக்கிநின்
மைந்தரைப் பாராய்எனக்
கருதரிய கடலாடை உலகுபல அண்டம்
கருப்பமாகப் பெற்ற கன்னி
கணபதியை அருகணைத்(து) அகமகிழ்வு
களிப்புடன் உமைகாக்கவே. (கொண்டாள்)

அகிலாண்ட கோடிகளைப் பெற்றவள்தான் கணேசனையும் பெற்றவள். அகிலாண்டமுமே அவரது உதரமாக உருண்டு திரண்டிருக் கிறது. அவரைத் தேவி அணைத்தால், அவர் முகமாக அவளது காப்பு உலகுக்குப் பாயும்.

"விகடமேன் செய்தாய்?" என்று விநாயகரைச் செம்பெருமான் கேட்டதாகக் கவிதை கூறுகிறது. விநாயகன் பெயரே விகடன். அவர் எப்படி விகடம் செய்யாதிருப்பார்? ஸுமுகன் என்றும் பிரசன்ன வதனன் என்றும் தனிப் பெயர் பெற்ற சுமுகன் பிறர் முகத்திலும் அகத்திலும் மலர்ச்சியை உண்டு பண்ணுவதே முதற் தொழிலாகக் கொண்டவர். சிரிப்பில் பிறந்த அவர் எங்கும் சிரிப்பை வளர்த்து ஆனந்தம் பரப்புவர்.

சிரிப்பில் பிறந்தவர்தான் அவர். ஈசனும் அம்பாளும் ஒருவரையொருவர் நோக்கி மென்னகை புரிந்து கொண்டனர். அந்த மந்தஸ்மிதத்தில் உருவானவர் விநாயகன்.

தந்தை தாயிடமே விகடம் செய்து அவர்கள் பிணங்கும்போது சேர்த்து வைத் திருக்கிறார் அவர்.

ஒருமுறை தேவி ஈசனிடம் ஊடியிருந்தாள். அப்போது கணநாதன் ஏதோ வேடிக்கை செய்ய, அன்னை தந்தை இருவருமே அவ ரிடம் வந்து முத்தமிட்டனர். சரேலென கஜானனன் தனது ஆனைத் தலையை விலக்கிக் கொள்ள பெருமானும் அன்னையுமே பரஸ் பரம் தீண்டிக் கொண்டுவிட்டனர். இந்த இரகசியத்தை ஒரு சமஸ்கிருதக் கவி அம் பலப்படுத்தியிருக்கிறார்.

இன்னொரு சமஸ்கிருதக் கவி இதேபோல் இன்னொரு குடும்ப சமாசாரத்தைப் போட்டு உடைத்திருக்கிறார்.

ஸ்வாமியிடம் தேவி பருகோபமாயிருந் தாள். வெளியுலகத்துக்குத் தெரியாது என்று நினைத்துச் சிவனார் தேவிக்கு நமஸ் காரமே செய்துவிட்டார். அப்போதும் அம்பாளின் சிறு தணியவில்லை. பிள்ளை பார்த்தது. தாமரைக் கிழங்கு என்றால் ஆனைக்கு மிகவும் விருப்பம். செம்பெருமான் தலையில் முளைத்திருந்த நிலாக் கீற்றைப் பார்த்தால் தாமரைக் கிழங்கைப் போலிருந் தது. உடனே தும்பிக்கையை வளைத்து நிலாவைச் சடை முடியிலிருந்து இழுக்கத் தொடங்கிவிட்டார் ஐங்கரன். சிவனார் படும்பாட்டைக் கண்டு தேவி சிரித்துவிட் டாள்; மனமும் இரங்கிவிட்டாள்.



பிரம்மசர்யத்துக்கு எவ்வளவு கனம் உண்டு என்பதைக் காட்டத்தான் விநாயகராக இருக்கிறார் கணபதி. காமமே எழாத குழந்தை அவர். யோக பிதாவான அவரை அதனால்தான் பிள்ளை, பிள்ளையார் என்றே சொல்கிறோம். கட்டைப் பிரம்மசாரியான போதிலும் தம்பதிகளின் பிணக்குகளை அவர் எப்படித் தீர்த்து வைக்கிறார் பாருங்கள்! அப்படி ஒரு நல்ல உள்ளம் விநாயகனுடையது. தமது வழி ஒன்றாக இருந்தாலும் வேறு வழிக்காரர்களிடமும் அநுதாபம் அவருக்கு உண்டு. முருகப்பெருமானுக்கு வள்ளியம்மை இடமே கொடுக்காதபோது, மத்தகஜமாக ஓடிவந்து அவளைப் பயமுறுத்தித் 'தம்பியின் தோளிலே சேர்த்தவரல்லவா?

திருமாலுக்கும் விநாயகருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இது உமையின் சோதரர் திருமால் என்பதோடு நின்றுவிடவில்லை. விநாயகரது சக்திகளான சித்திக்கும் புத்திக்கும் திருமால்தான் பாட்டனார். சித்தியும் புத்தியும் — அதாவது ஆற்றலும் அறிவும் — ஞானத்தோடு சேருவதே இத் திருமணம். இதனால் ஆன்ம லாபமும் ஆன்ம க்ஷேமமும் உண்டாகும். இதைய புராணங்கள் கூறுகையில் விநாயகருக்கு லாபம் என்றும் க்ஷேமம் என்றும் புத்திரர்களிருப்பதாகக் கூறும். ஆற்றல்களின் உறைவிடம் விநாயகர் என்பதால் அவரை வல்லபை நாயகனாகவும் சொல்லுவார்கள்.



விஷ்ணுவிடம் உள்ள தொடர்பை விட்டுவிட்டோமே! விநாயகப் பெருமானின் பிறந்தநாளை அம்பரன் ஆண்டுதோறும் கொண்டாடி மகிழ்வான். அப்போது விஷ்ணுவைப் போலவே சியாமள நிறமும் பீதாம்பரமுமாக விகவேதேவன் என்கிற பக்தன் வருகிறான். தேவி அவனையும் விருந்துக்கு அழைக்கிறாள். விஷ்ணு தரிசனம் இல்லாமல் உண்ணமாட்டேன் என்கிறான் விகவேதேவன். அப்போது விநாயகனே அவனுக்கு விஷ்ணுவாகத் தரிசனம் தருகிறார். அவனது பேத புத்தி நீங்குகிறது.

எல்லோரிடமும் விகடம் செய்யும் விநாயகர் விஷ்ணுவை விகடம் செய்ய வைத்ததும் உண்டு.

சகோதரியின் வீடான கயிலைக்கு வந்திருந்தார் கமலக்கண்ணன். "மாமா, என்ன கொண்டுவந்தாய்?" என்று கேட்டார் பிள்ளையார்.

விஷ்ணுவுக்கு வெட்கமாகி விட்டது. "மறந்தேன் கண்ணே, வெறுங் கையோடு வந்துவிட்டேன்" என்றார் நாராயணன்.

"வெறுங்கையா? சக்கரம்தான் இருக்கே!" என்று கூறிச் சக்கரத்தை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு விட்டார் விக்நேசுவரர்.

"ஐயோ, குழந்தை! சக்கரத்தைத் தின்று விடாதே! அது வாயை அறுத்து விடும்" என்று விஷ்ணு அலறினார். அம்பாளும் அலறினாள். "சரி, சக்கரத்தை உண்பதில்லை. வாயில் வெறுமே அடக்கிக் கொண்டிருக்கிறேன்" என்றார் கணபதி. விஷ்ணு முகத்தில் சமாதானமில்லை.



"எனக்கு வாய் அறுந்துபோகும் என்பதற்காக 'மாமா' அலறவில்லை. சக்கரம் இல்லாமல் தம் சக்தி போய்விடுமே என்றுதான் அலறுகிறார். நான் சக்கரத்தை உமிழ மாட்டேன்" என்று விடாப்பிடியாகக் கூறிவிட்டார் விநாயகர்.

இந்தப் பிள்ளையை அதட்டி உருட்டிப் பண்டத்தை வாங்க முடியாது என்று மாதவனுக்குத் தெரியும். யுக்தி செய்தார். தமது நான்கு கரங்களாலும் காதுகளைப் பிடித்துக் கொண்டு ஆடினார். விநாயகர் மலைபோன்ற தேகம் குலுங்கச் சிரித்தார். வாயிலிருந்து சக்கரம் கீழே விழுந்தது.

விஷ்ணு செய்த விளையாட்டிலிருந்துதான் தோப்புக்கரணம் போடும் பழக்கம் தோன்றியது. 'தோர்பி:' என்றால் 'கைகளால்' என்று பொருள். 'கர்ணம்' என்றால் காது. கைகளால் காதைப் பிடிப்பது 'தோர்பி: கர்ணம்' — அதுவே தோப்புக்கரணமாக மருவி விட்டது. விஷ்ணுவின் பாரிஷதரான விஷ்வக்சேனர் இவ்வாறு தோப்புக்கரணம் போட்டதாகவும் கதை உண்டு. விகடம் செய்த பின் சக்கரத்தைத் தந்த விநாயகர் காஞ்சி குமரக் கோட்டத்தில் குடிகொண்டிருக்கிறார். 'விகடச் சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்' என்று இவரைக் கச்சியப்பர் கந்தபுராணத்தில் துதிக்கிறார்.

விஷ்வக்ஸேனரே வைஷ்ணவ விநாயகர் தான் எனலாம். விஷ்ணு கணங்களின் அதிபதியான விஷ்வக்ஸேனரும் 'கணபதி' தானே? அவருக்கும் தும்பிக்கை உண்டு. ஸ்ரீரங்கத்தில் 'தும்பிக்கை ஆழ்வான்' என்றே அவரைக் கோயில் எடுத்துக் கும்பிடுகிறார்கள்.

ஸ்ரீ ரங்கநாதன் ஸ்ரீரங்கத்தில் இடம் கொள்ளவும் விநாயகர்தான் காரண புருஷர்.

ஸ்ரீ ராமனிடமிருந்து ரங்கநாத விக்கிரகத்தைப் பெற்றுக் கொண்டு விபீஷணன் இலங்கை திரும்பிக் கொண்டிருந்தான்.

'பூமியில் எங்கு வைத்தாலும் அங்கு அவ்விக்கிரகம் நிலைத்து





பகபதிவுகள்

நீண்டுவிடும்' என்று விபீஷணனிடம் ராமன் சொல்லியிருந்தார்.

விநாயகருக்கு ரங்கநாத விக்கிரகம் இந்தியாவை விட்டு இலங்கை செல்வது பிடிக்கவில்லை. ஆனால் மன்னன் ராமன் உத்தரவுக்கு மாறாக அவரால் ஏற்றுமதித் தடை செய்ய முடியாதே! அதனால் ஒரு தந்திரம் செய்தார். பிரம்மசாரிச் சிறுவனாக விபீஷணன் முன் தோன்றி, 'நாராயணப் பிரதிமையை நான் தூக்கி வருகிறேன்' என்றார். "அப்படியே செய். விக்ரகத்தை ஒருபோதும் கீழே மட்டும் வைத்து விடாதே" என்றான். "அப்படியே. ஆனால் எனக்குக் கை இற்றுப்போய்விட்டால் உங்களை மூன்று முறை கூப்பிடுவேன். நீங்கள் அதற்குள் வந்து வாங்கிக்கொள்ளாவிட்டால் விக்கிரகத்தைக் கீழே வைத்துவிடுவேன்" என்றார் பிள்ளையார். விடணன் ஒப்புக் கொண்டான்.

அகண்ட காவேரியின் மத்தி வந்ததும் விபீஷணன் அநுஷ்டானத்துக்கு அமர்ந்தான். "சரியான சமயம்" என்று குதூகலித்த விநாயகர், "மகாராஜா, கைபோச்சு, விக்கிரகத்தைச் சட்டென்று வாங்கிக்கொள்ளுங்கள், மகாராஜா, மகாராஜா!" என்று மூன்று முறை குரல் கொடுத்துவிட்டு, விபீஷணன் ஆசமனம் செய்து எழுந்து வருவதற்குள் விக்கிரகத்தைக் கீழே வைத்துவிட்டார். ஸ்ரீரங்கநாதர் நீண்டு வளர்ந்தார். அவ்விடமே அவருக்கு இருக்கையாகிவிட்டது.

விபீஷணன் விநாயகரைப் பிடிப்பதற்காகத் துரத்தினான். விநாயகர் மலைக்கோட்டை உச்சியில் ஏறி உச்சிப் பிள்ளையாராக உட்கார்ந்துவிட்டார். அப்போது விபீஷணன் குட்டியதால் உண்டான வடு இன்னும் உச்சிப்பிள்ளையார் தலையில் இருக்கிறது.

அதற்குப் பரிகாரமாகத்தான் இன்றும் நாம் விநாயகரைக் கண்டவுடன் குட்டிக்கொள்கிறோம்.

தத்துவம் அறிந்தவர்களோ, சிரஸில் உள்ள சகஸ்ரார கமலத்தில் ததும்பும் ஆனந்தத் தேனை நம் நாடிகளில் பாய்ச்சிக் கொள்வதற்குத்தான் அக்கமலத்தை ஆட்டுமுகமாகப் பொட்டுக்களில் குட்டிக் கொள்கிறோம் என்பார்கள்.

சிரஸின் உச்சியில் உள்ள ஆத்ம ஸ்வரூபமே தாம் என்று உணர்த்தத்தான் உச்சிப் பிள்ளையாராக அவர் அமர்ந்திருக்கிறார். ஆத்ம ஸ்வரூபம் ஜீவர்களைத் தோற்றுவிக்கும் ஆதாரமும் அவரே. அப்போது அவரை மூலாதார கணபதி என்கிறோம். திருவாரூரில் அகஸ்தியருக்கு அருள் புரிந்த வாதாபி கணபதியை 'மூலாதார க்ஷேத்ர ஸ்திதம்' என்று தீக்ஷிதர் அவர்கள் பாடுகிறார்.

சிறந்த விநாயக பக்தரான காசி ராஜனின் அரண்மனைக்குக் குழந்தை விநாயகர் செல்லுகிறார். அவரைத் தடுமாறி விழச் செய்யும் நோக்கத்துடன், அசுரன் ஒருவன் அரண்மனை வாயிற்படிக் கல்லுக்குள் ஒளிந்து கொண்டிருந்தான்.

அதனருகே வந்ததும் குழந்தை நின்றது. காசி மன்னனுக்கும் காசினி மன்னரான பெருமானுக்கும் பரி பூரண கும்பம் கொண்டு வந்திருந்தனர்.

"அந்தத் தேங்காய்களை யெல்லாம் இந்தப் படிக்கல்லில் உடையுங்கள்" என்றார் பிள்ளைப் பெருமான்.

அப்படியே உடைத்தார்கள். தேங்காய் உடைந்தது; கல்லும் உடைந்தது. அசுரன் மாண்டான்.

சிதறு தேங்காய் உடைக்கும் வழக்கம் இப்படி ஏற்பட்டது. இன்னொரு வரலாறு:

"அப்பா, உன்னைத் தியாகராஜன் என்கிறார்களே! நீ எதையும் தியாகம் செய்வாயா?"! என்று பரமேசுவரனைக் கேட்டார் பாலவிநாயகர்.

"செய்கிறேன் செல்வமே!" என்றார் சிவபெருமான்.

"எனக்கு யானைத் தலையாக இருக்கே! உன் தலையை எனக்காகத் தியாகம் செய்வேன்" என்றார் குமாரர்.

சங்கரன் தயங்கவில்லை. அப்படியே தம் தலையைப் பலி தந்துவிட்டார்.

கணபதி மீண்டும் அதனைத் தந்தைக்கே தந்துவிட்டார். "இந்த என் முகத்தைவிட உன் ஆனை முகம்தான் வஞ்சனை யில்லாத அழகடா கண்மணி" என்று பரமனும் பரிந்து கூறினார்.



முக்கண் உள்ள தேங்காய் முக்கண்ணனுக்கு ஓர் அடையாளம். எல்லா ஐசுவரியங்களையும் விநாயகருக்காகத் தியாகம் செய்ய வேண்டும் என்ற தாத்பர்யத்தில் பரமேசுவர ரூபமான தேங்காயை



"தமிழ்ப்பாட்டிக்குக் கைலாகு கொடுத்துக் கைலாசம் அனுப்பிய பிரபுவும் கணநாதனே அல்லவா?

அவர் முன் உடைக்கிறோம். தேங்காய் அகங்காரத்தைக் குறிக்கும். கெட்டியான ஓட்டைப் பார்த்தால் தெரியவில்லையா? நம் உள்ளே உள்ள ஆனந்த இள நீரை மறைப்பது ஆணவ ஓடுதானே? ஆணவத்தை உடைத்தெறிவதற்கு அடையாளமாகத் தேங்காயை உடைக்கிறோம். ஆங்காரம் அகன்றும் ஓங்கார கணபதி தோன்றுவார்.

தந்தையைத் தியாகம் செய்ய வைத்த கணநாதன் தாமுமே ஒரு தியாகி. இந்தத் தியாகத்தை ஸ்ரீ காமகோடி பெரியவாளின் வாக்கில் கேட்போம்:

"ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொன்றிலே அதிக கௌரவம் இருக்கும். சவுரி மானின் கௌரவம் அதன் வாலில். மயில் என்றும் அதற்குத் தோகை விசேஷம். இதேபோல் யானைக்குத் தந்தத்தில் ,கௌரவம். ஆனால் இந்த யானை (விநாயகர்) என்ன பண்ணிற்று என்றால் அந்தக் கொம்பில் ஒன்றையே ஒடித்து மகாபாரதத்தை எழுதிற்று. தன் அழகு, கௌரவம், கர்வம் எல்லாவற்றுக்கும் காரணமாக இருக்கிற ஒன்றைக் காட்டிலும் தர்மத்தைச் சொல்கிற ஒன்றுதான் பெரிது என்பதை இந்த யானை காட்டுகிறது. தருமத்துக்காக, வித்யைக்காக எதையும் தியாகம் பண்ண வேண்டும் என்பதை இந்த யானை தியாகம் பண்ணிக் காட்டியிருக்கிறது" என்று தியாகியைப் போற்றுகிறார் யோகி.

வியாசர் சொல்லச் சொல்ல பாரதம் எழுதியது மட்டுமின்றி, அகத்தியர் சொல்லத் தமிழிலக்கணத்தையும் விக்நேசுவரன் மேரு மலையில் எழுதினாராம். இந்தச் செய்தியைத் திருப்புகழ் தெரிவிக்கிறது.

முத்தமிழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே

இதிலிருந்து விநாயகர் தமிழுக்கு மிகவும் வேண்டியவர் என்று தெரிகிறதல்லவா? 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்று அவ்வை வேண்டிய தெய்வமாச்சே!

தமிழ் மறையான தேவாரம் நமக்குக் கிடைத்ததற்குக் காரணமே அவர்தான்.

திருநாரையூரைச் சேர்ந்த நம்பி தனது தந்தை வெளியூர் சென்றிருக்கையில் தானே பிள்ளையார் பூஜை செய்தான். நிவேதனத்தைப் பிள்ளையார் உண்டுதான் ஆகவேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்தான். கல் கடவுளாயிற்று. கஜானனன் குழந்தை தந்த நிவேதனத்தை ஏற்றுத் தமிழ் தனத்தை அவனுக்கு அளித்தார். தேவாரங்கள் தில்லை ஆலயத்தில் மறைந்திருப்பதை அவனுக்கு உணர்த்தி, அவை வெளி உலகுக்கு வர வழி செய்தார். தமிழிடம் அவருக்குள்ள அன்பு எத்தகையது பார்த்தீர்களா?

தமிழ்க் கடவுளாம் முருகனுக்கு வள்ளியுடன் மணம் முடித்த விநாயகர் அவருக்கு ஞானோபதேசமும் செய்ததுண்டு என்பதை ஒரு சம்ஸ்கிருதக் கவிதை தெரிவிக்கிறது.

"ஐங்கரா, ஓர் ஐயம்" என்றார் பால ஸ்கந்தர். "அப்பாவும் அம்மாவும் அர்த்த நாரியாக ஒன்றும்போது, அப்பாவின் ஒரு பாதியும் அம்மாவின் ஒரு பாதியும் என்னவாகின்றன?" என்று கேட்டார்.


"அப்பாவின் அந்தப் பாதிதான் எல்லா ஆண்களும் ஆகிறது; அம்மாவின் அந்தப் பாதிதான் எல்லாப் பெண்களும் ஆகிறது" என்று விடை சொன்னார் வேழமுக ஞானதீபம்.

'ஓம் ஞானதீபாய நம:' என்பது பிள்ளையாருக்கு ஓர் அர்ச்சனை. 'ஞானக் கொழுந்து' என்றே திருமூலரும் சொல்வார்.

உபதேசம் தந்த பிள்ளையாரே நம் பிக்கு வார்தியும் தந்திருக்கிறார். ஆம், ஸ்கந்தனுடைய மயில் ஆரம்பத்தில் விநாயக பீடம்தான் இருந்தது. நாலு யுகங்களிலும் நாலு விதத் தோற்றத்துடனும், நாலுவித வாகனங்களுடனும் விளங்குவார் கணபதி.

கிருதயுகத்தில் அக்னியின் ; மஞ்சள் நிறத்தவராய், பத்துக் கைகளுடன், சிம்ம வாகனத்தின் மீது விநாயகர் என்ற பெயரில் விளங்குவார். திரேதா யுகத்தில் வெண் நிறத்தராய், ஆறு கைகளுடன் மயில் வாகனத்தின் மீது மயூரேசர் என்ற பெயரில் திகழ்வார். துவாபர யுகத்தில் செப்பு வண்ணராக, நான்கு கரங்களுடன், மூஷிக வாகனத்தின் மீது கஜானனன் என்ற நாமம் தரித்துப் பொலிவார். கலியுகத்தில் தூமவர்ணராக, இரு கரம் தாங்கி, குதிரை மீதமர்ந்து தூம்ரகேது என்ற பெயரில் அருள் பாலிப்பார்.

இவர்களில் மயூரேசர்தான் மயில்வாகனர். 'சுவர்ணம்' என்ற அடைமொழி கொடுத்துப் பரமசிதனாக, பரம பாவனராகப் போற்றப் படுபவர் இவர். இவரைத்தான் வேதங்கள்



தமக்கு அதிபதியாக்கி, கணபதி என்ற விருதை அளித்தனர். சிந்து என்ற அரக்கனைக் கொன்று அமரேசனைச் சிறைமீட்ட பின் சித்தி – புத்தியை மணந்தவரும் இவரே. திருமணத்துக்குப் பின் தாமது யோகமான ஆனந்த புவனத்துக்குச் செல்கையில் மயூரத்தைத் தம்பிக்குப் பரிசளித்துவிட்டார். பழத்தைத் தம்பி பெற முடியாமல் முன்பு பறித்துக் கொண்டு அவரைப் பழனியாண்டியாக்கியதற்கு ஈடாக, இப்போது அவரை நீல மயிலேறும் கோலக் குமரனாக்கி விட்டார்.

மூஷிகத்தை விநாயகர் வாகனமாக்கிக் கொண்ட கதை அனைவருக்கும் தெரியும். தம்மை எதிர்த்த அசுரனையே மூஷிக வடிவில் தமது திருமேனியைத் தாங்கும் பாக்கியசாலியாக்கி விட்டார் அவர். இதனில் பொதிந்துள்ள ஓர் உண்மையை அற்புதமாகச் சொல்கிறார் ஸ்ரீ காமகோடி பெரியவாள்:



''இவரோ யானை மாதிரி இருக்கிறார். அதற்கு நேர் விரோதமான ஆகிருதி உடையது மூஞ்சூறு. தாம் எத்தனைக்கு எத்தனை பெரிய ஸ்வாமியாக இருக்கிறாரோ அத்தனைக்கு அத்தனை சின்ன வாகனமாக வைத்துக் கொண்டிருக்கிறார். வாகனத்துக்குக் கௌரவம் கொடுக்க, அதனுடைய சக்திக்கு ஏற்றபடி அதற்குச் சிரமம் இல்லாமல் தெட்டுப் பிள்ளையார் மாதிரி கனம் இல்லாமல் இருக்கிறார். மற்றவர்களை உபகரணமாக வைத்துக் கொண்டு அவர்களுக்கு அந்தஸ்தை உண்டாக்கித் தரும்போதே, தாம் அவர்களுக்குப் பாரமாக இல்லாமல் இருக்கிறார்.''

அத்வைத ஞானத்தைத் தாங்கியபடியே பாமர மக்களுக்கு இலேசாக அருள் சுரக்கும் பெரியவாள் தவிர யார் இப்படிச் சொல்ல முடியும்?



ஒரு விரோதியை வாகனமாக்கிக் கொண்டது போலவே இன்னொரு விரோதியான கஜமுகாசுரனின் ஆனைத் தலையை ஆண்டவன் தரிப்பதும் அவரது இதய விசாலத்துக்குச் சான்றாகும்.

விநாயகரின் வாசஸ்தானமான ஆனந்த புவனத்தைச் சிறிது பார்ப்போம். அதன் பெயரே, அது சச்சிதானந்தம் வழங்கும் பரம பதம் என்பதை உணர்த்துகிறதல்லவா? ஆனந்த பூரணத்துக்கு மறுபெயரே அன்றோ மகாகணேசர்? ஆனந்தம்தானே மோதகம்? ஆம், நிறைவுதானே அதனுள் உள்ள பூரணம்? கருப்பஞ்சாற்றுக் கடலுக்கிடையேயுள்ள அமுதத் தீவு ஆனந்த புவனம். அங்கு பொதுவாக, கணபதியை மகாகணபதியாகவே தியானிப்பது வழக்கம். மகாகணபதியின் பீஜாக்ஷரங்களையும், அவர் தாங்கும் ஆயுதங்களையும் கண்டாலே அவரில் சகல தேவதைகளும் அடக்கம் என்று புரியும். லக்ஷ்மி, அம்பிகை, மன்மதன், பூதேவி, ஞானன் ஆகிய இவரது பீஜாக்ஷரங்களும் அவரது மந்திரத்தில் அடங்கியிருந்து அவர் செல்வம், ஞானம், அன்பு, பொறுமை, புலனடக்கம் அனைத்தும் அருள்வார் என்கிறது. அவரது பீஜாக்ஷரம் 'கம்' என்பது. 'கம்'மென்று நறுமணம் வீசுவதாகச் சொல்கிறோம். அவர் கந்தர். பேசாமலிருப்பதற்குக் 'கம்'மென்று இருப்பதாகச் சொல்கிறோம். அவர் மௌன நாதன். 'கம்' என்றும் உள்ளுக்குள் ஒரு கனம் ஏற்படும். அவர் ஆனந்த கனம். மகா கணபதியின் வலப்புறத்துக் கரங்கள் யாவும் பெண் தெய்வங்களின் ஆயுதங்களைத் தாங்குவன. சிவபெருமான் இடப் பகுதியைப் பெண்ணுக்குத் தந்தது போல் இவர் வலப்புறத்தில் தாயாகத் திகழ்பவர். இவர் ஆண் பெண் இரண்டுமே என்பதைக் குறிக்கத்தான் இடப்புறம் ஆண் யானை போல் கொம்புடனும், வலப்புறம் பெண் யானை போல் கொம்பின்றியும் திகழ்கிறார். முழுக்கப் பெண் உருவில் 'கணேசானி' என்ற பெயரிலும் அவருக்குச் சிற்பங்கள் உண்டு.

இதே போல் மனித இனம் விலங்கினம் இரண்டும் கலந்து, மனித உடலுடனும் யானை முகத்துடனும் விளங்கும் கணேசனை மனித முகமே கொண்ட நரமுக கணபதியாகவும் சிற்பிகள் வடித்துள்ளனர்.

திவ்விய தேஜோரூபியான கணநாதன் தலையில் பிறைமதி மிளிர, முக்கண்ணராக விளங்குவார். அவரது கன்னத்தில் வழியும் மதநீரை வண்டினங்கள் மொய்க்கவரும். அதற்காகத் தமது நீண்ட செவிகளை ஆட்டிக் கொண்டிருப்பார். இத் திருக்கோலத்தில் அவரைத் தியானிப்பதற்கு மேல் சௌந்தரியம் உண்டோ ?

விநாயகரின் சௌந்தரியம் மண்டிக் கிடப்பது அவரது பேழை வயிற்றில்தான். திருப்தியின் உருவம் அந்தத் தொந்தி. அதில் ஆதிசேஷனையே அரைஞாணாகக் கட்டியிருப்பார். குண்டலினியைக் கட்டிப் போட்ட பிரம்மசாரி என்பது இதற்குத் தாத்பரியமாயினும், புராணக் கதையும் உண்டு.

கணேசனாக மட்டுமின்றி நற்குணங்கள் யாவும் அமைந்த குணேசனாகவும் விநாயகர் ஒரு முறை அவதரித்தார். அப்போது பாதாள லோகம் சென்று வாசுகியையும் ஆதிசேஷனையும் வென்றார். வாசுகியைக் கழுத்தில் மாலையாக இட்டுக் கொண்டார். (பூணூலாகப்

போட்டுக் கொண்டதாகவும் கருதி, பல ஆலயங்களில் நாகயக்ஞோபவீத கணபதியின் சிலை அமைத்துள்ளனர்.) ஆதிசேஷனை இடையில் கட்டிக் கொண்டார்.

குணேசனைப்போல் பல அவதாரம் செய்தவர் விநாயகர். பிறப்பில்லாத ஆதி கணபதியின் பிரதிமையை அம்பாள் வழிபட்டு, ''எனக்குப் பிள்ளையாகப் பிற'' என வேண்டினாள். புரட்டாசி, சுக்லபட்ச சதுர்த்தியில், திங்கட்கிழமையன்று, சுவாதி நட்சத்திரமும் சிம்ம லக்னமும் கூடிய திவ்விய நாளில் பிரதிமை பிள்ளையாராக உயிர் பெற்றது. அவரே குணேசன்.

வயிறு குலுங்க ஆனந்த நிர்த்தமிடுவார் அவர். தமது பன்னிரண்டாவது மாதத்தில், கூத்தப் பிரானுடன் நாட்டியத்தில் போட்டியிட்டவர் இவர். அப்பனுடையது நளின நடனம்; பிள்ளையுடையது கம்பீர நாட்டியம்.

சீதக்களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாட

என்று இந்த நடனத்தில்தான் தமிழ்ப் பாட்டி தனது அகவலைத் தொடங்குகிறாள். 'கனதரம்புகுவு மகிமை பதமுத கல்லு கல்லை நுருகி' என்று தியாகையர்வாளும் இந்த ஆனந்தக் கணபதியின் அழுத்தமான நடனத்தையே அழகுற வர்ணிக்கிறார்.

பார்வதி தேவியின் அழுக்கிலிருந்து விநாயகர் தோன்றியதாகவும் கதை உண்டு. 'இது என்ன ஆபாசம்! தேவியின் உடலிலும் அழுக்கா?' என்று முதலில் அருவருக்கத்தான் தோன்றும். யோசித்தால் அதிலும் தத்துவம் மிளிரும். உலகில் அழகு மட்டும்தான் உள்ளதா, அழுக்கும்தானே உள்ளது? அவ்வனைத்துக்கும் தேவி பராசக்திதானே பிறப்பிடம்? நம் அனைவருடைய பிறப்புங்கூட அழுக்குடன் தொடர்புள்ளதுதானே? கணேசனும் நம்மில் ஒருவனாகவே தோன்றப் பிரியப்பட்டிருப்பாரோ என்னவோ? தோற்றம் எங்கிருந்தாலும் ஆற்றலால் ஆண்டவனாகலாம் என்பதை மெய்ப்பிக்கிறாரோ?,

கணேச ஆவிர்பாவம் பற்றி இன்னொரு கதை: தேவியும் மகாதேவனும் கைலாசத்திலுள்ள சித்திர மண்டபத்துக்குச் சென்றனர். அங்கு எழு கோடி மூலமந்திரங்களும் எழுதப்பட்டிருந்தன. அவற்றில் நடுநாயகமாக, சகல மந்திர ஸ்வரூபமான பிரணவம் அதன் சமஷ்டி வியஷ்டி உருவங்களில் பொறிக்கப்பட்டிருந்தது. சமஷ்டிப் பிரணவத்தைப் பரமன் பார்த்தார். அதிலிருந்து ஓர் ஆண் யானை வெளிப்பட்டது. அதே போதில் வியஷ்டிப் பிரணவத்தை தேவி நோக்கினாள். அதிலிருந்து பெண் யானை வெளிப்பட்டது. இரு யானைகளும் கலந்து விக்நேசுவரன் தோன்றினார்.

சக்தியின் புன்முறுவல்கள் வடிக்கத் தோன்றியவரே பிள்ளையார் என்பதுமுண்டு.

இது தவிர காசிபருக்கும் அதிதிக்கும் மதோத்கடன் என்ற பெயரில் விநாயகர் திரு அவதாரம் செய்து அற்புத லீலைகள் செய்ததும் உண்டு.

விநாயகருக்கு எவ்வளவு உருவ பேதங்கள் உண்டு என்று சொல்ல முடியாது. ஐம்பத்தொரு சக்திகளுக்குச் சரியாக ஐம்பத்தொரு விநாயக மூர்த்தங்கள் உண்டு என்பர். ஷோடச கணபதி என்று பதினாறு ரூபங்களைக் கொண்டாடுவர். மஹாகணபதி, உச்சிஷ்ட கணபதி என்ற இருவரே முக்கியமாக உபாஸிக்கப்படுபவர்கள்.

எதிலும் இருக்கும் அவருக்கு எத்தனை ரூபமுண்டு என யார் கணக்கெடுக்க முடியும்? அவர் எதிலும் இருப்பவர் என்பதால்தான் களிமண்ணிலும், மஞ்சளிலும், சாணியிலும் கூட அவரைப் பூஜிக்கிறோம்.

அவரது உருவங்களில் சிறந்தது பிள்ளையார் சுழியே என்பார்கள். பிரணவாகாரமான யானை முகத்தை 'ஓம்' குறிக்கிறது எனில், காரணமான பிரணவத்தோடு காரியமான உலகையும் சேர்த்துக் குறிப்பது பிள்ளையார் சுழி என்பார்கள்.

பிள்ளையார் சுழி போடாத காரியம் ஜெயிக்காது என்பது நம்மவர் நம்பிக்கை. பிள்ளையாரை நினைத்தபின்தான் லலிதா தேவி பண்டனைக் கொன்றாள். பிள்ளையாரைப் பூஜித்தபின்தான் ஈசன் திரிபுரரை சம்ஹரித்தான். அவரைப் பூஜிப்பது வெகு எளிது. அருகம்புல்லையும் எருக்கம்பூவையும் போட்டு அவரை நம் வசமாக்கிக் கொண்டு விடலாம்.

பல்லவசேநாபதி பரஞ்சோதி வாதாபியை வென்று அங்குள்ள விநாயகரைத் திருச்செங்காட்டங்குடிக்குக் கொண்டு வந்தபின்தான் தமிழகத்தில் கணபதி வழிபாடு பரவிற்று என ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். அதெப்படியாயினும் இன்று தமிழகத்தின் சந்து பொந்துகளிலெல்லாம், அரசமரத்தடிகளிலெல்லாம் அரசு செலுத்துபவர் விநாயக ஸ்வாமியே. பிள்ளையார் பட்டி, திருவலஞ்சுழி ஆகிய தலங்களில் அவரே முக்கியஸ்தர். மதுரையிலும் சிதம்பரத்திலும் முக்குறுணி அரிசிப் பிள்ளையாராகப் பிரம்மாண்ட வடிவில் திகழ்கிறார்.

உலகெல்லாம் வணங்கப்படுபவர் அவர். ஒருவரையொருவர் தழுவும் இரட்டைப்பிள்ளையாக அவரை ஜப்பானில் வழிபடுகிறார்கள். ஜைனர்களும் பௌத்தர்களும் அவரை வேறு பெயரில் வணங்குகிறார்கள். மெக்ஸிகோவில் கூட கணபதி வழிபாடு உள்ளது என்று காமகோடி பெரியவாள் கூறியிருக்கிறார்.

ஹேரம்ப உபநிஷதம், கணபதி உபநிஷதம், பார்க்கவ புராணம் முதலிய நூல்களிலிருந்து அவரையே பரப்பிரம்மமாக, பரம்பொருளாக அறிகிறோம். இவ்வாறு வழிபடுவதே ஆறு சமயங்களில் ஒன்றான காணாபத்தியம். 'க' என்பது மனோ வாக்கையும், 'ண' என்பது அதற்கு மேம்பட்ட அருவ ஆனந்தத்தையும் குறிப்பதாகவும், 'கணபதி' என்பவர் இந்தப் பேரின்ப நாயகனே ஆன்ம ஸ்வரூபமே என்றும் காணாபதர் கூறுவர்.

நான் முன்னுரைத்தேன் கோடிமுறை
இன்னும் கோடிமுறை சொல்வேன்
ஆன்மாவான கணபதியின்
அருளுண்டு அச்சம் இல்லையே,

என்று இதைத்தான் கோடிக் கோடி முறை பாரதியும் கூறியிருக்கிறார். அருளைப் பணிவோம்; அச்சம் தணிவோம்.